DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 283 of 2024 |
| Deposition of witness for | : | PW8 |
| Name | : | அன்புச்செழியன் |
| Father's Name | : | அன்னவேல். K |
| Village | : | மருதிப்பட்டி |
| Taluk | : | அரூர் |
| District | : | தருமபுரி |
| Profession | : | MVI G – I, கிருஷ்ணகிரி |
| Age | : | 59 years |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 07th day of November 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :–

நான் தற்போது கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை – I ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.11.2021 அன்று பணியில் இருந்த போது மகாராஜா கடை காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதம் பெற்று குற்ற எண்.32/2021 U/s.279, 337, 304A IPC வழக்கில் சம்பந்தப்பட்ட விபத்து வாகனம் AP 39 TC 9913 என்ற பேருந்தை அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அந்த வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த சேதாரம் பின்வருமாறு :

1.வலது புறம் முகப்பு விளக்கு உடைந்திருந்தது.

2.வலது புறம் முன்புற தடுப்பான் முனை பகுதி உட்புறமாக வளைந்திருந்தது.

வாகனம் இயக்கி பார்த்ததில் தடைதிறன் 64 சதவீதம் இருந்தது. இவ்விபத்தானது இயந்திர கோளாறினால் ஏற்பட்டது அல்ல என சான்று வழங்கினேன். அந்த சான்று **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இதே வழக்கில் சம்பந்தப்பட்ட இரு சக்கர வாகனம் TN 24 K 9709 என்ற வாகனத்தை 02.09.2021 அன்று அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அதில் ஏற்பட்டிருந்த சேதாரம் பின்வருமாறு :

1.முகப்பு விளக்கு உடைந்திருந்தது.
2.Handle bar பொருத்தும் இடம் உடைந்திருந்தது.
3.போர்ட் வளைந்திருந்தது.
4.பின்புறம் பார்க்கும் கண்ணாடி இரண்டும் உடைந்திருந்தது.
5.முன்புற சக்கரத்தின் சகதி தடுப்பான் உடைந்திருந்தது.
6.கிளட்ச் மற்றும் பிரேக் லிவர் உடைந்திருந்தது.
7.இடது புறம் முன்புற தடுப்பான் வளைவு மற்றும் சிராய்ப்பு ஏற்பட்டிருந்தது.
8.இடது புறம் பெட்ரோல் டேங்க் உட்புறமாக வளைந்து மற்றும் சிராய்ப்பு ஏற்பட்டிருந்தது.

வாகனம் இயக்கி பார்க்க முடியாத நிலையில் இருந்தது. இவ்விபத்தானது இயந்திர கோளாறினால் ஏற்பட்டது அல்ல என சான்று வழங்கினேன். இந்த சான்று **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

விபத்து ஏற்பட்ட எத்தனை நாட்களுக்குள் ஆய்வு செய்ய வேண்டும் என்றால் உடனே செய்ய வேண்டும். AP 39 TC 9913 என்ற பேருந்து ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். TN 24 K 9709 என்ற வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சமர்ப்பிக்கவில்லை. ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சாலை விதிகளை பின்பற்றி ஓட்டத் தெரியாது என்றால் சரிதான். AP 39 TC 9913 என்ற பேருந்து 8 மாத காலம் கழித்து தான் ஆய்விற்கு கொண்டு வரப்பட்டது என்றால் சரிதான். TN 24 K 9709 என்ற பேருந்து 6 மாத காலம் கழித்து தான் ஆய்விற்கு கொண்டு வரப்பட்டது என்றால் சரிதான். இரண்டு வாகனங்களும் மேற்படி இடைப்பட்ட காலத்தில் வேறு எங்கும் அடிபட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடன் சம்பவ இடத்திற்கு நாங்கள் செல்ல வேண்டும் என்றால் தகவல் கிடைத்தவுடன் செல்ல வேண்டும். நேரடியாக சம்பவ இடத்திற்கு சென்று பார்த்திருந்தால் விலாவாரியாக எந்தெந்த வாகனங்கள் எங்கெங்கு அடிபட்டுள்ளது என்று தெரிந்திருக்கும் என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

M SANTHI
CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.